

தஞ்சாவூர் மாவட்டம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் ரூ.11.82 கோடி செலவில் 16 புதிய கட்டடங்கள் திறந்து வைத்து, ரூ.7.45 கோடி மதிப்பீட்டில் 13 புதிய கட்டடங்களை அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் முனைவர் கோவி.செழியன் ஆகியோர் நேற்று முன்தினம் (11.05.2025) அடிக்கல் நாட்டினர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.பிரியங்கா பங்கஜம், எஸ்.கல்யாணசுந்தரம் எம்.பி., ச.முரசொலி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன் (திருவையாறு), டி.கே.ஜி.நீலமேகம் (தஞ்சாவூர்), என்.அசோக்குமார் (பேராவூரணி) தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன் , மாநகராட்சி துணை மேயர் மரு.அஞ்சுகம்பூபதி (தஞ்சாவூர்), மாநகராட்சி ஆணையர் க.கண்ணன் , தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கோ.பாலசுப்பிரமணியன் , இணை இயக்குநர் (சுகாதாரம்) மரு.செல்வகுமார் , மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பா.கலைவாணி , மாநகர நல அலுவலர் மரு.நமச்சிவாயம் ஆகியோர் உடனிருந்தனர்.

### அரியலூர் மாவட்டத்தில் – அரியலூர் வடக்கு ஒன்றியம் சார்பில்

# நாடுபோற்றும் நான்காண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

## கோ.அறிவழகன் தலைமை! குத்தாலம் அன்பழகன் – கு.விஜயகுமார் சிறப்புரை!

அரியலூர், மே,13-

திராவிட நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின், அவர்கள் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் ஆணைக்கிணங்க தலைமை கழக அறிவிப்பின்படியும்,

அரியலூர் மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழிகாட்டுதலின்படி "நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு" சாதனை விளக்க பொதுக்கூட்டம் அரியலூர் மாவட்டம் அரியலூர் வடக்கு ஒன்றியம் இராயம்புரம் கிராமம் அண்ணா திடலில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு அரியலூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் கோ. அறிவழகன் தலைமை வகித்தார். மாவட்ட சுற்றுச்சூழல் துணை அமைப்பாளர் ச. சந்திர கௌதம் வரவேற்புரை ஆற்றினார். ஒன்றிய துணைச் செயலாளர்கள் சி. நெடுஞ்செழியன்,

ஆ.தர்மலிங்கம், மாவட்ட பிரதிநிதிகள் மா. கந்தசாமி,பி.ரவி, இரா. சரவணன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மாநில கொள்கை பரப்பு செயலாளர் குத்தாலம் க. அன்பழகன், உயிரினும் மேலான கழக இளம் பேச்சாளர் கு.விஜயகுமார் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். இக்கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி அமைப்பாளர் ம. ஜெயக்குமார், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் ஆனந்த், மாவட்ட அணி பொறுப்பாளர்கள் த.இளம்பரிதி,

ம. கதிரவன், பச்சையம்மாள்,இரா. ஐயப்பன், இராயம்புரம் கழக தோழர்கள் கிருஷ்ணன், தங்கராசு, கந்தசாமி, கழகத் தோழர்கள் சிவக்குமார், பழனிமுத்து, பூங்கொடி, கந்தசாமி, பரமசிவம், ரவி, சரஸ்வதி, சரவணன், விஜயலட்சுமி மனோகரன் தென்றல், காந்தி, தமிழரசி, தர்மராஜ்,கண்ணன், ரங்கன், அண்ணாமலை, கதிரவன், மணிவேல், சாந்தி,பாலமுருகன், வினோத், குருசாமி, மணி, காமராஜ், கொளஞ்சி ஜெகதீசன் செல்வம்,அகிலன், மணி, மகேந்திரன், மகாராஜன், செல்வி மற்றும் மாவட்ட ஒன்றிய நகரக் கழக நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

இறுதியாக கிளைக் கழக செயலாளர் த.சிவக்குமார் நன்றி கூறினார்.



முத்துப்பேட்டை ஒன்றியம் சார்பில் ஒன்றிய செயலாளர் இரா.மனோகரன், மாவட்ட துணை செயலாளர் எம்.எஸ்.கார்த்திக் மற்றும் நிர்வாகிகளின் ஏற்பாட்டில் பாண்டி கடைவீதியில் நடைபெற்ற பிரமாண்ட பொதுக்கூட்டத்தில், திருவாரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் அச்சிடப்பட்ட கழக அரசின் சாதனை தொகுப்பு புத்தகத்தை தலைமைக்கழக பேச்சாளர் குத்தாலம் கே.அன்பழகன் பொதுமக்களிடம் வழங்கினார். தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.ஆடலரசன், மாவட்ட விவசாயத் தோழிலாளர் அணி அமைப்பாளர் அன்பழகன் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



கொரடாச்சேரி தெற்கு ஒன்றிய கழகம் சார்பில் ஒன்றிய செயலாளர் ஆர்.பாலச்சந்திரன் மற்றும் நிர்வாகிகள் ஏற்பாட்டில் அம்மையப்பன் கடைவீதியில் நடைபெற்ற பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் பூண்டி கே.கலைவாணன், ஒன்றிய செயலாளர் சேகர் கலியபெருமாள், கவிஞர் வேளாங்கண்ணி பொன்னிவளவன், தலைமைக் கழக இளம் பேச்சாளர் தினேஷ்குமார், பேரூர் செயலாளர் பூண்டி கே.கலைவேந்தன் மற்றும் நிர்வாகிகள் பங்கேற்று பேசினர்.

### "நாடுபோற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு"

# திருவாரூர் மாவட்டத்தில் நான்காம்கட்ட பொதுக்கூட்டங்கள்!

## முத்துப்பேட்டையில் பெருந்திரளான இளைஞர்கள் கழகத்தில் இணைந்தனர்!

திருவாரூர், மே.13 -

திராவிட நாயகர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலிண் அவர்கள், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களின் வழிகாட்டுதல்களின்படியும் தலைமைக் கழக அறிவிப்பின்படியும், "நாடுபோற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு" மூன்றாம் கட்ட பொதுக் கூட்டங்கள், திருவாரூர் மாவட்டத்தில் எழுச்சியோடு நடைபெற்றது.

கழக அரசின் சாதனைகளை போற்றும் விதமாக மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ப.ஆடலரசன், குத்தாலம் கே.அன்பழகன் உள்ளிட்டோர் சாதனைகளை விளக்கி பேசியதோடு, திருவாரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் அச்சிடப்பட்ட கழக அரசின் சாதனைகளின் தொகுப்பு புத்தகம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

கொரடாச்சேரி தெற்கு ஒன்றிய கழகம் சார்பில் ஒன்றிய செயலாளர் ஆர். பாலச்சந்திரன் மற்றும் நிர்வாகிகள் ஏற்பாட்டில் அம்மையப்பன் கடைவீதியில் நடைபெற்ற பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் பூண்டி கே.கலைவாணன், ஒன்றிய செயலாளர் சேகர் கலியபெருமாள், கவிஞர் வேளாங்கண்ணி பொன்னிவளவன், தலைமைக் கழக இளம் பேச்சாளர் தினேஷ்குமார், பேரூர் செயலாளர் பூண்டி கே.கலைவேந்தன் மற்றும் நிர்வாகிகள் பங்கேற்று பேசினர்.

முத்துப்பேட்டை ஒன்றியம் சார்பில் ஒன்றிய செயலாளர் இரா.மனோகரன், மற்றும் பேரூர் செயலாளர் எம்.எஸ்.கார்த்திக் உள்ளிட்ட நிர்வாகிகளின் ஏற்பாட்டில் பாண்டி கடைவீதியில் நடைபெற்ற பிரமாண்ட பொதுக்கூட்டத்தில், தலைமைக் கழக பேச்சாளர் குத்தாலம் கே. அன்பழகன், தலைமைக் கழக இளம் பேச்சாளர் தீன்ஷா நூப் ஆகியோர் பங்கேற்று பேசினர். கூட்டமேடையில் கழக அரசின் சாதனைகளை போற்றும் விதமாக 25 இளை ஞர்கள் ஒன்றிய செயலாளர் இரா.மனோகரன், மாவட்ட துணை செயலாளர் எம்.எஸ்.கார்த்திக், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.ஆடலரசன், தலைமைக் கழக பேச்சாளர் க.அன்பழகன் ஆகியோர் முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்து கொண்டனர்.

வலங்கைமான் மேற்கு ஒன்றியம் சார்பில் ஒன்றிய செயலாளர் வீ.அன்பரசன் மற்றும் நிர்வாகிகளின் ஏற்பாட்டில் நடைபெற்ற பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் ஒன்றிய செயலாளர் தெட்சிணாமூர்த்தி, நகர செயலாளர் பா.சிவநேசன், தலைமை கழக பேச்சாளர்கள் வே.விக்ரமன், செல்வி. கனிமொழி மற்றும் நிர்வாகிகள் பங்கேற்று பேசினர்.

மன்னார்குடி மேற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் ஒன்றிய செயலாளர் டி.எஸ்.டி.முத்துவேல் மற்றும் நிர்வாகிகள் ஏற்பாட்டில் நடைபெற்ற பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, அவைத்தலைவர் க.தன்ராஜ், தலைமைக்கழக பேச்சாளர் வெ.ராஜமாணிக்கம் மற்றும் நிர்வாகிகள் பங்கேற்று பேசினர். கூட்டங்களில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர மற்றும் வார்டு கிளைக் கழக நிர்வாகிகள், பெருந்திரளான பொதுமக்கள் பங்கேற்றனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் மாசநாயக்கன்பட்டி ஊராட்சியில் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு என்ற தலைப்பில் தி.மு.க. அரசின் சாதனைகள் விளக்கப் பொதுக்கூட்டம் அயோத்தியாப்பட்டணம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.விஜயகுமார் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டப் பிரதிநிதி குமரவேல், தலைமைக் கழக பேச்சாளர் தமிழ்ச்செல்வன், செந்தில்குமார், ஹரி காந்திமதி, ஆறுமுகம், சின்னசாமி, சின்னத்தம்பி, அகரம் ராஜேந்திரன், இன்பராசு, பேரூராட்சி செயலாளரும் பேரூராட்சி தலைவருமான செல்வராஜ், செல்வ சூர்யா சேதுபதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## 29-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



பொதுவுடமை தந்த புத்துயிர்ப்பு...
பொழுதளந்த திராவிடத்தில் உயிர்துடிப்பு!!!
போற்றும்படி வாழ்ந்த போர்முனைப்பு...
பூமி தந்த அவரே தனிப்பிறப்பு...
நூறாண்டு கடந்த நூல் மதிப்பு...

திரு A.K.சுப்பையா, EX MLA.,
தோற்றம் : 03.04.1920 ● மறைவு : 13.05.1996


நீங்கா நினைவுகளுடன்...

குடும்பத்தினர்கள் மற்றும் கழக தோழர்கள்

பாலன் டிஜிட்டல் திருச்சி - 9865787764

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அழகு திருநாவுக்கரசு
### மே 13 (2015)



மாணவர் பருவத்தில் காரைக்குடி அழகப்பா கல்லூரியில் பயின்ற போது திராவிட மாணவர் கழக அமைப்பாளராக செயல்பட்டதுடன் தமிழகம் முழுவதும் கல்லூரிகளுக்கு சென்று திராவிட மாணவர் கழக அமைப்புகளை உருவாக்கியவர்.

கழக விவசாய தொழிலாளர் அணியின் செயலாளராக இருந்தார். தஞ்சை மற்றும் திருவாரூர் மாவட்ட பகுதிகளில் அவர் செய்த பொதுச் சேவைகள் மூலம் மக்களிடம் நிரந்தர செல்வாக்கு பெற்றவராக விளங்கினார்.

தலைவர் கலைஞர் மற்றும் தளபதி அன்பை பெற்றவராக திகழ்ந்தார். இறுதிநாள் வரை தந்தை பெரியார் அவர்களின் பகுத்தறிவு மற்றும் சீர்திருத்தக் கொள்கைகளை ஏற்று சுயமரியாதைக்காரராக வாழ்ந்து மறைந்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.